
EXCAPE
URMI
எக்ஸ்கேப்உர்மி

## உங்கள் வகுப்பறையையும் சுற்றி முற்றிப் பாருங்கள்.

ரப்பரால் ஆன ஐந்து (5) பொருட்களை உங்களால் பெயரிட முடியுமா ?



ஒப்புகை : மோகன் செல்வகண்ணு

உங்கள் வகுப்பறையையும் சுற்றி முற்றிப் பாருங்கள்.

ரப்பரால் ஆன ஐந்து (5) பொருட்களை உங்களால் பெயரிட முடியுமா ?







உங்களுக்கு ரப்பர் எங்கே இருந்து வருகிறது என்று தெரியுமா ?
ஒப்புகை : மோகன் செல்வகண்ணு


பதில்:
வெட்டப்படும் ரப்பர்
மரங்களிலிருந்து
ஒப்புகை: மோகன் செல்வகண்ணு





ஒப்புகை: மோகன் செல்வகண்ணு

மலேசியா உலகின் முதன்மை ரப்பர் உற்பத்தியாளர்களில் ஒன்றாக இருந்தது. உலகில் தயாரிக்கப்படும் ரப்பரின் பாதி மலேசியாவில் தயாரிக்கப்பட்டது. ஆனால் ரப்பர் மலேசியாயாவை பூர்வீகமாக கொண்டிருக்கவில்லை.

# இது எங்கிருந்து வரவழைக்கப்பட்டது என்று உங்களுக்கு தெரியுமா ?





# பதில்: பிரேசில் நாடு



உலகின் பாதி ரப்பர் மலேசியாவில்
உற்பத்தியானது என்றால், ரப்பர் வெட்டும்
தொழிலில்  செய்ய எத்தனை அதிகமான பேர்
வேலைச்செய்திருக்க வேண்டும் என்று நீங்கள்
கற்பனைச் செய்துப்பார்க்கலாம்.

ரப்பர் மரங்களை
வெட்டியவர்கள் யார்
தெரியுமா?



மூலம் : ரவுப் ஒடெருத்

1700 - ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து, பிரிட்டன் காலனித்துவ அரசு, தென்னிந்தியாவில் பலரை மலேசியாவுக்கு கொண்டு வந்தது. (அக்காலக்கட்டத்தில் மலேசியா, மலாயா என்று அழைக்கப்பட்டது). அவர்கள் ரப்பர்த் தோட்டங்களிலும் துறைமுகங்களிலும் கூலி வேலை செய்யக் கொண்டுவரப்பட்டனர்,

இந்த தொழிலாளர்கள் ஒப்பந்தத் தொழில் அமைப்பின் ஒரு பகுதியாக இருந்தனர். இந்த முறை கங்காணி அமைப்பு என்றும் அழைக்கப்பட்டது. மலாயாவிற்கு பயணம், உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றிற்கு கைமாறாக மக்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட வன்முறைத்தன்மை மிகுந்த அமைப்பு இது.

இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பலர் வறுமையிலிருந்து தப்பிக்க அவ்வாறு செய்தனர். இது இந்தியாவின் பிரிட்டிஷ் காலனித்துவத்தினால் விளைந்த விளைவாகும்.



இந்தியாவிலும் மலாயாவிலும் சரி இந்த மக்களுக்கு வாழ்க்கை கடினமாக இருந்தது. கடும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் அவர்கள் மிக நீண்ட நேரம் வேலை செய்தனர். அவர்கள் மிக வசதி குறைந்த நிலையில் எளிமையான வாழ்ந்து வந்தனர். இந்த மக்கள் மிகக் குறைந்த சுய உரிமைகளை கொண்டதோடு மிக நியாயமற்ற முறையிலும் நடத்தப்பட்டனர்.





பலர் இந்தியாவுக்குத் திரும்பவில்லை, தங்களுக்கென்று ஒரு சமுகத்தையம் அடையாளத்தையும் உருவாக்கி மலாயாவிலேயே வாழ்ந்தனர்.

மூலம் : கியூஸ் ஆவணகம்

பிஜி, இலங்கை, தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ் மற்றும் டிரினிடாட் போன்ற உலகின் பிற பகுதிகளிலும் இதே ஒப்பந்த தொழிலாளர் முறை நடைமுறையில் இருந்தது. இந்த நாடுகள் பிரிட்டிஷ் காலனிகள் என்றும் அழைக்கப்பட்டன. இந்த நாடுகளுக்கு கடினமான பயணங்களை மேற்கொண்ட மக்கள் கரும்பு தோட்டங்களில் வேலை செய்தனர். இந்த நாடுகளுக்குச் சென்ற பலர் பிரிட்டிஷ் காலனித்துவ அலுவலகங்களில் நிர்வாகிகளாகவும் பணிபுரிந்தனர் என்பதோடு மட்டுமல்லாமல் இந்த காலனிகளின் ஆட்சியில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆளுமைக்கு துணைப்புரிந்தனர்.



டிரினிடாட்டைச் சேர்ந்த கிர்மித்தியா (ஒப்பந்தத் தொழிலாளி).



இருப்பினும், இந்தியர்கள் மலாயாவிற்குவருவது இது முதல் முறை அல்ல. தென்னிந்திய ஆட்சியாளர்களும் வணிகர்களும் முதன்முதலில் 10 ஆம் நூற்றாண்டில், அதாவது 1000 ஆண்டுகளுக்கு முன்பு மலாயாவிற்கு வந்தனர்!









**ஆரம்பகால நூற்றாண்டுகள் கி.பி**

தென்னிந்திய வணிகர்களும் ஆட்சியாளர்களும் இந்தியப் பெருங்கடல் வர்த்தகத்தில் ஈடுபட மலாயாவுக்கு வருகிறார்கள்

**சோழ நூற்றாண்டு**

சோழ வம்சம் கடல் எல்லையை தென்கிழக்கு ஆசியா வரை விரிவுபடுத்தியது

**11 ஆம் நூற்றாண்டு**

சோழப் படைகள் மலாய் தீபகற்பத்தின் சில பகுதிகளில் அரசியல் கட்டுப்பாட்டை நிறுவுகின்றன

**11 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு**

தமிழ் மற்றும் இந்து தாக்கங்கள் உள்ளூர் மலாய் கலாச்சாரத்தில் உள்வாங்கப்பட்டன

தமிழுக்கு நிகரான சில மலாய் வார்த்தைகளை யோசிக்க முடிகிறதா?

மலேசியாவிற்கு ரப்பர் தோட்டத்தில் வேலை செய்ய தென்னிந்தியாவிலிருந்து பயணித்த ஒருவரைச் சந்திப்போம்.

சகுந்தலையின் கணவர் தமிழ்நாட்டின் ஒரு சிறிய கிராமத்தை விட்டு வெளியேறி, 1900 களின் முற்பகுதியில் மலாயாவில் ஒரு புதிய வாழ்க்கைக்கான பயணத்தை மேற்கொண்ட நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களுடன் சேர்ந்தார். 10 ஆண்டுகளுக்குள் தன் கடனை அடைக்க அவருக்கு பணி அனுமதி அட்டை மற்றும் போதுமான ஊதியம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. 18 வயதான சகுந்தலை, அவருக்கு தன் கணவருக்கு முன் பயணம் செய்த உறவினர்கள் மூலம் அவரைப் பற்றி ஏதும் கேள்விப்படாததால், அவர் தனது மூன்று குழந்தைகளுடன் தன்னிடம் இருந்ததைக் கட்டிக்கொண்டு, தனது கிராமத்தில் பஞ்சத்திலிருந்து தப்பிக்க மலாயாவுக்கு படகில் ஏறினார்.



மலாயாவில், சகுந்தலை கெடாவில் உள்ள தோட்டத்தில் ரப்பர் வெட்டும் தொழிலாளியாக வேலை செய்தார். அவள் கணவனுடன் மீண்டும் சேரவில்லை என்றாலும், அவள் கடினமாக உழைத்து தன் குழந்தைகளை தானே வளர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.



ஒப்புகை: செல்வம் ராஜமாணிக்கம்

அவர் அதிகாலை 2 மணி முதல் அதிகாலை 5 மணி வரை வேலை செய்யத் தொடங்கினார், இருளில் சீரற்ற நிலப்பரப்பில் தலையில் விளக்கைக் அணிந்துக்கொண்டு மற்றும் சக பெண் தொழிலாளியுடன் சென்று, மரத்தை காயப்படுத்தாமல் இருக்க உறுதியான கையால் ரப்பர் மரத்தில் துல்லியமான கீறல்களை வெட்டி அயராது உழைத்தாள். திரும்பத் திரும்பச் அதே வேலையைச் செய்வது அவளுக்குச் சலிப்பை ஏற்படுத்தியபோதும், அவள் தனக்குத்தானே பாடல்களைப் பாடிக்கொண்டும், தன் குழந்தைகளுக்குச் சொல்லக் கதைகளைக் கற்பனையை செய்து கொண்டாள்.

ஒப்புகை: மோகன் செல்வகண்ணு

பின்னர், அவள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்ட வாளிகளில் உறைந்த மரப்பால் சேகரித்து, மதியம் திரும்பினாள். சேகரிக்கப்பட்ட ரப்பர் பாலின் எடை சகுந்தலையின் வாரக் கூலியைத் தீர்மானித்தது. சகுந்தலையும் அவளுடைய தோழியும் தங்களுடைய சக ஆண் தொழிலாளர்களைப் போலவே கடுமையாக உழைத்தார்கள், ஆனால் அவர்களது ஊதியம் ஆண் தொழிலாளர்கள் பெறும் கூலியை விட குறைவாகவே இருந்தது. தோட்டத்தில் வேலைச் செய்வது முடிந்தவுடன், அவர்கள் தங்கள் குழந்தைகளை சமைக்கவும் பராமரிக்கவும் சரியான நேரத்தில் வீட்டிற்கு விரைந்து செல்ல வேண்டியிருந்தது, அதே நேரத்தில் ஆண்கள் கள் கடையில் கூடி, வேலைச் செய்த களைப்பை நீக்க குடித்தார்கள். கணவனின் பாதுகாப்பு இல்லாமல், தேவையற்ற கவனத்தைத் தவிர்க்க சகுந்தலை அமைதியான வாழ்க்கை வாழ்ந்தாள். வெள்ளை எஜமானர்கள் தோட்டத்திற்கு கண்காணிப்பிற்குச் சென்றபோது அவள் தலையைக் குனிந்து குழந்தைகளை நெருக்கமாக வைத்திருந்தாள்.



ஒப்புகை: செல்வம் ராஜமாணிக்கம்

ஒப்புகை: மோகன் செல்வகண்ணு

இரவில், ஒரு சிறிய மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில், அவள் தன் குழந்தைகளின் உதவியுடன் சேகரித்த கிளைகளில் விளக்குமாறு செய்தாள்; இவற்றை, அவளது குழந்தைகள் கூடுதல் வருமானத்திற்காக கிராமம் முழுவதும் விற்றுவிடுவார்கள். பெரிய வீடுகள் மற்றும் பழத்தோட்டங்களைப் பற்றிய கதைகளைக் கூறி, கிளைகளை சமமாகப் பிரிப்பது அவளுக்கு மிகவும் பிடித்தமான பகுதியாக இருந்தது.



குச்சிகளில் கயிற்றில் முடிச்சுகளை கட்டும்பொழுது, அவளுடைய குழந்தைகள் தங்களால் வாங்க முடியாத இனிப்பு தின்பண்டங்கள் மற்றும் பொம்மைகளைப் பற்றி தங்கள் சொந்த கனவுகளை கனவு காணும் ஏக்கங்களோடு இருந்தனர்.





ஒப்புகை: மோகன் செல்வகண்ணு

அவள் தன் பிள்ளைகள் தோட்டப்பள்ளிக்குப் பள்ளிக்குச் சென்று அவர்கள் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதை உறுதிசெய்தாள். அவர்கள் தன்னைப் போல படிப்பறிவற்றவராக இருக்க அவள் விரும்பவில்லை. பள்ளியில் அவர்கள் ஆங்கில வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதை பற்றி கேட்டபோது அவளுக்கு சிலிர்ப்பாக இருந்தது. தன் பிள்ளைகள் வளர்ந்து அரசு வேலையில் சேர்ந்த பிறகும், சகுந்தலை தனது பேரக்குழந்தைகளை வளர்க்கவும், அவர்களுக்கு சிறு வசதிகளை வழங்கவும் தனது இறுதி நாட்கள் வரை ரப்பர் மரம் வெட்டினார் தன் நினைவுகள் மங்கத் தொடங்கிய முதுமையிலும் அதே கதைகளை பேரக்குழந்தைகளுக்குச் சொன்னாள். எல்லாவற்றிற்கும் மேலாக, அது அவளுக்கு மிகவும் பிடித்த நாளாக இருந்தது; ஒரு சிறிய விளக்கின் வெளிச்சத்தில், மூன்று தலைமுறையினர் தங்கள் கனவுகளையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டனர். இப்போது அவளது பாரம்பரியத்தில் எஞ்சியிருப்பது அவள் ஒவ்வொரு பேரக்குழந்தைகளுக்கும் பரிசளித்த பாதுகாப்பு தங்க இடுப்பு சங்கிலிகள், அர்னாக்கொடி, மற்றும் அவர்கள் அவளை நினைவில் வைத்திருக்கும் கதைகள்.



ஒப்புகை: செல்வம் ராஜமாணிக்கம்



ஒப்புகை: மோகன் செல்வகண்ணு

நீங்கள் உங்களை சகுந்தலை என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் வரும்போது வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்?

நீங்கள் எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்திருப்பீர்கள்?

உங்கள் பயணத்தில் என்னென்ன பொருட்களை தங்களுடன் கொண்டு வந்திருப்பீர்கள்?

அவள் எப்படி உணர்ந்திருப்பாள் என்று நினைக்கிறீர்கள்?

இந்தக் கேள்விகளை உங்கள் ஆசிரியரிடம் விவாதித்து, உங்கள் வகுப்பில் சேர்ந்து உங்கள் அனுபவத்தை விவரிக்கும் ஒரு சிறு கவிதையை எழுதுங்கள்.

இப்பொழுது மலேசிய இந்திய கல்வியாளர்களின் ஒருவரான முனைவர் ஆர். தண்டாயுதம் எழுதிய நாட்டுப்புறப் பாடல்களை பார்ப்போம். இந்த பாடல் வரிகளை இன்பநிலா சுகுமார் சேகரித்து மொழிப்பெயர்த்துள்ளார்.

## மலேசிய நாட்டுப்புற பாடல்கள்

ஆட்டு மாட்டு மந்தையைப் போல
ஆங்கிலேயர்களும் நம்மை
கூட்டில் அடைத்து வைத்து
கொடுமைகள் செய்கின்றாரே

கரும்பு தோட்டத்திலே -- நம் இந்தியரை
கூலியெனும் பெயர் கொடுத்து
கொண்டுபோறார் பதிவு செய்ய
ரயில்ல ஏத்தி

கஷ்டப் பட்டோமே பத்து வெள்ளி தான்
கொடுத்து ரயில்ல ஏத்தினான்
சேலை பேனு சொறி சிரங்கு -- நாங்க
நொந்து வாழறோம்

## Yet, we persist

No different from herding
goats and cattle,
the English cage us,
and abuse us.

In the sugarcane plantations,
we, the Indians,
are renamed coolies,
flocked into trains,
then, taken to be branded.

They paid only ten coins,
the price of our agony,
then rounded us up on trains.
Lice in our clothes, itching scabies--
yet we persist
painfully.

மூலம்: நெஞ்சநிலம்

உங்கள் வகுப்புக் கவிதை கொடுக்கப்பட்ட கவிதையைப்போல உள்ளதா? உங்கள் வகுப்பில் உள்ள மற்றவர்கள் வித்தியாசமாக எழுதிய சில விஷயங்கள் என்ன?

தென்னிந்திய மக்கள் மலாயாவிற்கு எப்படி வந்தார்கள் என்பதையும், இன்று கலாச்சாரத்தை வளர்ப்பதில் அவர்கள் ஆற்றிய பங்கு பற்றியும் நீங்கள் அறிந்துள்ளீர்கள்.

## காலவரிசையை உருவாக்க பின்வரும் படங்களை மறுசீரமைக்கவும்.



தொழிலாளர் ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்த முறை



கங்காணி முறையின் முடிவு



பினாங்கில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம்



சோழ மன்னர்களின் செல்வாக்கு



தென்னிந்திய ஆட்சியாளர்கள் வருகை

900 C.E. — 1200 — 1786 — 1800s — 1938


900 C.E.
தென்னிந்திய ஆட்சியாளர்கள் வருகை
1200
சோழ மன்னர்களின் செல்வாக்கு
1786
பினாங்கில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம்
1800s
தொழிலாளர் ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்த முறை
1938
கங்காணி முறையின் முடிவு


இன்று மலேசியாவில் உங்கள் வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள்.
பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் வாழ்க்கைக்கு ஏதேனும் ஒற்றுமைகள் உள்ளதா?

இன்று மலேசிய இந்தியப் பெண்களின் இந்த மூன்று கதைகளைக் கேளுங்கள்.




மேலே கொடுக்கப்பட்டுள்ள கதைகளுள் சகுந்தலையின் வாழ்க்கையை ஒத்த மூன்று விஷயங்களைக் கண்டுபிடிக்க முடியுமா?

காலனியாதிக்கத்தின் மரபுகள் இன்றும் நம் வாழ்வில் எப்படி நிலவுகின்றன என்பதைப் புரிந்துகொண்டு, உங்கள் கற்றல் வளத்தின் இறுதி கட்டத்திற்கு வந்துவிட்டீர்கள். நீங்கள் வளரும்போது உங்களுக்கும் உங்கள் வகுப்பு தோழர்களுக்கும் என்ன விருப்பங்கள் இருந்தன?




உங்கள் வீட்டுப்பாடத்திற்கு, இந்த விருப்பங்களின் அடிப்படையில் ஒரு படத்தை வரைந்து, நீங்கள் கற்றுக்கொண்டதை உங்கள் அன்புக்குரியவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்களிடம் கைத்தொலைப்பேசி அல்லது கணினி இருந்தால், உங்களுடன் சேர்ந்து கீழே உள்ள இணையதளத்தை ஆராயும்படி அவர்களிடம் கேளுங்கள்.

அன்புள்ள ஆசிரியர்களே,

இந்த கற்றல் வளத்தினை  பதிவிறக்கியதற்கு நன்றி! உங்களுக்கும் உங்கள் வகுப்பிற்கும் இது ஒரு கலகலப்பான கற்பித்தல் அனுபவமாக இருந்திருக்கும் என நம்புகிறோம்.

உங்கள் தலைப்பை ஆராய்வதற்கான சில கூடுதல்  கற்றல் வளங்கள் இங்கே உள்ளன.

1. தோட்டங்களில் இருந்து காணாமல் போன மெல்லிசைகள்
2. பேரரசின் எலும்புக்கூடுகள்
3. சிங்கப்பூர் மற்றும் தமிழ்நாட்டுத் தமிழர்கள்

உங்கள் வகுப்பறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள எங்களைத் தொடர்பு கொள்ளவும். உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் காத்திருக்கிறோம்.

மனமார்ந்த வாழ்த்துக்கள்,
முனைவர்  கீதா ரெட்டி,
முனைவர்  நித்தியா குண சேகரன்,
இன்பநிலா சுகுமார், லேயா அரின் கோமேஸ்



ஒப்புகை: செல்வம் ராஜமாணிக்கம்